பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 09 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று சியாச்சின் முகாமில் ராணுவ வீரர்களுடன் கலந்துரையாடுகிறார்.
2. பிரதமர் திரு நரேந்திர மோடி, மகாராஷ்டிர மாநிலத்தில் இன்று 22 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.
3. ஐ நா சபையில் உடனடியாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.
4. ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குப்பதிவு அதிகரித்து ஜனநாயகம் வலுப்பெற்றுள்ளது என்று தலைமைத் தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார் கூறியுள்ளார்.
5. உலக ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டி இன்று பெருவில் தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று சியாச்சின் ராணுவ முகாமுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

அங்கு பணியில் உள்ள ராணுவத்தினருடன் அவர் கலந்துரையாடுகிறார்.

லடாக் யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான ராணுவ முகாம் சியாச்சின் பனிமலையாகும்,

காரகோரம் மலைத்தொடரில் 20 ஆயிரம் அடி உயரத்தில் சியாச்சின் முகாம் அமைந்துள்ளது.

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ பி ஜே அப்துல் கலாம் ஆகியோருக்குப் பின் அங்கு திருமதி திரௌபதி முர்மு செல்லவுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மகாராஷ்டிரா செல்கிறார்.

புனேவில் இன்று மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் 22 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

புனே மாவட்ட நீதிமன்றத்திலிருந்து புனே-யின் ஸ்வர்கேட் வரை இயக்கப்படும் மெட்ரோ ரயிலை அவர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

இரண்டாயிரத்து 950 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள ஸ்வர்கேட்-கத்ராஜ் மெட்ரோ விரிவாக்கப் பணிக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

பிடேவாடாவில், சாவித்ரிபாய் பூலேவின் முதல் பெண்கள் பள்ளியின் நினைவுச் சின்னத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

சூப்பர் கம்ப்யூட்டிங் தொழில்நுட்பத் துறையில், இந்தியாவை தற்சார்புடைய நாடாக மாற்றும் நோக்கில், தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் இயக்கத்தின் கீழ் உள்நாட்டிலேயே 130 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்ட மூன்று பரம் ருத்ரா சூப்பர் கம்ப்யூட்டர்களை திரு நரேந்திரமோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இந்த சூப்பர் கம்ப்யூட்டர்கள் புனே, தில்லி மற்றும் கொல்கத்தாவில் முன்னோடி அறிவியல் ஆராய்ச்சிக்கு உதவுவதற்காக நிறுவப்பட்டுள்ளன.

வானிலை மற்றும் பருவநிலை ஆராய்ச்சிக்கான உயர் செயல்திறன் கொண்ட கணினி அமைப்பையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறையில் 10 ஆயிரத்து 400 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

மகாராஷ்டிரா மாநிலம் சத்ரபதி சம்பாஜிநகரில் சரக்கு வாகன ஓட்டுநர்களுக்கான ஓய்வறை வசதிகளையும் தொடங்கி வைக்கும் பிரதமர், இந்த நிகழ்ச்சியின்போது 500 மின்சார வாகன சார்ஜிங் மையத்தையும் திறந்து வைக்கிறார்.

மகாராஷ்டிராவில் மூன்று எரிவாயு நிலையங்கள் உட்பட, நாடு முழுவதும் 20 திரவ இயற்கை எரிவாயு நிலையங்களையும் திரு நரேந்திரமோடி நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

[]<<<>>>[]

மின்சார வாகனப் போக்குவரத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளீட்டவற்றில் இந்தியா அதிக கவனம் செலுத்தி வருவதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஆண்டுக் கூட்டத்தில் திருமதி நிர்மலா சீதாராமன் பங்கேற்று பேசினார்.

இந்தியாவின் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு வலுவாக உள்ளதால் நாட்டின் வளர்ச்சி மேலும் அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

வலுவான அடிப்படைகளுடன், சிறந்த எதிர்காலத்தை நோக்கி இந்தியா பயணிப்பதாக அவர் தெரிவித்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலம் என்ற இலக்குடன் இந்தியா செயல்படுவதாக தெரிவித்த திருமதி நிர்மலா சீதாராமன், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று கூறினார்.

[]<<<>>>[]

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இருதரப்பு வர்த்தகம் 2030-ம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலரை எட்டும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் அடிலைடில் நடைபெற்ற 19-வது இந்திய – ஆஸ்திரேலிய கூட்டு ஆணையக் கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவில் 2014-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உற்பத்திக்கான இந்தியா இயக்கம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

உற்பத்தி, தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு ஆகிய துறைகளில் இந்தியா தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக அந்நிய முதலீகள் இந்தியாவில் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் இடையேயான நல்லுறவு மேலும் வலுவடைந்துள்ளதாக திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஐ நா சபையில் உடனடியாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

நியூயார்க்கில் நடைபெற்ற ஜி-20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், சர்வதேச அளவில் முடிவெடுக்கும் அமைப்புகளில், வளரும் நாடுகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்.

பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர இடங்களை விரிவுபடுத்துவது அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

பிரேசிலின் ஜி-20 தலைமைத்துவத்தில் நடைபெற்ற இந்த வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் மற்றும் ஐ நா பொதுச் சபை அமர்வுக்கு இடையே பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்து திரு ஜெய்சங்கர் பேச்சு நடத்தினார்.

ரஷ்யா, தென்கொரியா, ஸ்விட்சர்லாந்து, ஸ்லோவாகியா, நைஜீரியா,. எத்தியோப்பியா, ஈராக், சிரியா, ருவாண்டா உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் திரு ஜெய்சங்கர் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குப்பதிவு அதிகரித்து ஜனநாயகம் வலுப்பெற்றுள்ளது என்று தலைமைத் தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார் கூறியுள்ளார்.

ஜம்மு-கஷ்மீரில் 26 தொகுதிளில் நேற்று நடைபெற்ற இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் 57 புள்ளி பூஜ்சியம் மூன்று சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு ராஜீவ்குமார், இது வரலாற்று சிறப்பு வாய்ந்தது என்று தெரிவித்தார்.

முன்பு நடைபெற்ற தேர்தல்களின்போது குறைந்த அளவிலேயே வாக்குகள் பதிவானதை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஜம்மு மற்றும் பள்ளத்தாக்கு பகுதியில் வாக்குப்பதிவு அமைதியாகவும், விறுவிறுப்பாகவும், நடைபெற்றதாக திரு ராஜீவ்குமார் கூறினார்.

இதனிடையே ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இரண்டாம் கட்ட தேர்தல் அமைதியாக நடைபெற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

துடிப்பான மற்றும் வளமான ஜனநாயகம் ஜம்மு-கஷ்மீரில் நிலவுவதை வாக்குப்பதிவு சதவீதம் காட்டுவதாக அவர் கூறியுள்ளார்.

தேர்தல் அதிகாரிகள், காவல்துறையினர், பாதுகாப்புப்படையினர் உள்ளிட்ட அனைவரது பணியும் பாராட்டத்தக்கது என்றும் திரு மனோஜ் சின்ஸா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வரும் நிலையில் அதற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் நடைமுறையால் தேர்தல் செலவு குறையும் என்றும், நிர்வாகம் எளிதாகும் என்றும் தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - பொதுமக்கள்) ---50 செகண்ட்*

**[]<<<>>>[]**

மும்பையில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

முழுந்த், அந்த்தேரி உள்ளிட்ட பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே மும்பை மற்றும் தானேயில் இன்று அதிக கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

இதையடுத்து மும்பையில் பள்ளி கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தேவையின்றி விடுகளைவிட்டு வெளியே வரவேண்டாம் என மும்பை மாநகராட்சி நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் நேற்று ஒரே நாளில் 50-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்நிலையில் லெபனானில் உள்ள இந்தியர்களுக்கு அங்குள்ள இந்திய தூதரகம் முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

லெபனானில் உள்ள இந்தியர்கள் அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தவிர்க்க இயலாத காரணங்களால் அங்கு இருப்பவர்கள் மிகுந்த கவனத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மறு அறிவிப்பு வரும் வரை இந்தியர்கள் யாரும் லெபனானுக்குச் செல்ல வேண்டாம் என்றும் தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

உலக ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டி இன்று பெருவில் தொடங்குகிறது.

லிமாவில் இப்போட்டி அடுத்த மாதம் எட்டாம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இதில் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கின்றனர்

**[]<<<>>>[]**

17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய சாம்பியன் கால்பந்து போட்டியில் பாகிஸ்தான் அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

பூட்டானில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அந்த அணி -இலங்கை அணியை ஐந்து – ஒன்று என்ற கோல் கணக்கில் வென்றது.

இப்போட்டியில் இந்தியா ஏற்கனவே அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள அரை இறுதி ஆட்டங்களில் இந்தியா – நேபாளத்தையும், பாகிஸ்தான் - பங்ளாதேசையும் எதிர்கொள்கின்றன.

***End of News***